Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு


மலர் 7 EELA NADU இதழ் 59

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 28 துல்ஹஜ் பிறை 7 (10 4 65) சனிக்கிழமை

ஈ ழ நா டு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |




கூ. மொ. வீ. ஊழல் பற்றி விசாரணை ★ தனியார் துறைக்கு ஊக்கமளித்தல் ★ கமத்தொழில் அபிவிருத்தி ★ பௌத்த மதத்துக்கு உரிய அந்தஸ்து

# "சகலருக்கும் சமநீதி; தமிழ் சட்டம் அமுல்

## விவசாய அபிவிருத்தியில் தீவிர நடவடிக்கை"

### தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப்பிரசங்கம்

கொழும்பு, வெள்ளி

"சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சிங்களம் மட்டும் சட்டமும், தமிழ் உபயோக மொழிச் சட்டமும் அமுல் நடத்தப்படும் இதற்கான முறையில் தமிழ்மொழி உபயோகச் சட்ட ஷரத்துக்கள் கொண்டுவரப்படும். இன, சமூக, சமய பேதமின்றி சகலருக்கும் நீதியின் அடிப்படையிலும் மனித உரிமையின் அடிப்படையிலும் எனது அரசாங்கம் செயலாற்றும். சென்ற வருடம் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையை அமுலாக்கும் பொருட்டு இந்திய அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த எனது அரசாங்கம் உத்தேசித்துள்ளது."

சுதந்திர இலங்கையின் ஆறுவது பார்லிமெண்டின் கூட்டத்தை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா இன்று காலை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைத்து நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் கவர்னர் ஜெனரல் நிகழ்த்திய உரையில் பெரும்பகுதி விவசாய, பொருளாதார அபிவிருத்தியைக்கொண்டதாக அமைந்திருந்தது.

அதன் சாரம் வருமாறு:-

● "கடந்த தேர்தலில் மக்கள் சுதந்திரமாக அளித்த வாக்குகளைக்கொண்டு அவர்கள் ஒரு சுபீட்சமிக்க இடத்துக்கு இட்டுச்செல்லும் அரசாங்கத்தை விரும்புகின்றார்கள் என்பது தெரிகிறது. மக்களின் இந்த விருப்பத்தை நிறைவேற்ற எனது அரசாங்கம் முயற்சிக்கும்.

சகலருக்கும் சமநீதி

● இன, சமூக சமயவேறுபாடின்றி சகலருக்கும் நீதியின் அடிப்படையிலும், மனித உரிமையின் அடிப்படையிலும் எனது அரசாங்கம் செயலாற்றும்.

● பௌத்த மதத்துக்கு உரிய ஸ்தானம் அளிக்கும் அதே நேரத்தில், இதர மதங்களின் சுதந்திர வழிபாட்டு சுதந்திர உரிமை மதிக்கப்படும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## பார்லிமெண்டில் புதிய சரித்திரம்

### கதிரவேலுப்பிள்ளை தமிழில் கன்னிப்பேச்சு நிகழ்த்தி உருவாக்கினர்

#### அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் புகார்

கொழும்பு, வெள்ளி

இலங்கை சுதந்திரமடைந்தபின் இன்றுதான் முதல் தடவையாக சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை தமிழ்ப்பிரதிநிதி ஒருவர் அனுவதித்து தமிழில் உரைநிகழ்த்தினர். ஜனப்பிரதிநிதிகள் சபையில் இவ்விதம் புதிய சரித்திரத்தை ஏற்படுத்தியவர் தமிழரசுக்கட்சியின் கோப்பாய்த் தொகுதி எம். பி. யான திரு. சி. கதிரவேற்பிள்ளையாவர். பார்லிமெண்டில் திரு. கதிரவேற்பிள்ளையின் முதல்பேச்சும் இதுதான்.



எதிர்க்கட்சியினர் ஆட்சேபம்

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையைத் திரு. டானியல் அப்புஹாமி பிரேரித்துப் பேசினர். முன்னாள் நிதிமந்திரி திரு டி. பி. இலங்கரத்னவை கடந்த பொதுத் தேர்தலில் ஹேவாஹெட்டத் தொகுதியில் தோற்கடித்தவர் திரு. டானியல் அப்புஹாமி.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினரின் பகுதியில் முதல் வரிசையை விடுத்து இரண்டாவது வரிசையில் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் இன்று அமர்ந்து ஒரு ஆச்சரியத்தை எதிர்க்கட்சியினர் சபையில் ஏற்படுத்தினர். பின் எதிர்க்கட்சியினரைச் சரியாக நடத்தவில்லையென்று சபாநாயகரிடம் அவர்கள் புகார் செய்தனர்.

கெனமன் குற்றச்சாட்டு

சபையில் ஆசன ஒழுங்கு பற்றியும் விவாதம் நடந்த நேரம் ஒதுக்குவது பற்றியும் எதிர்க்கட்சியினரைக் கலக்காலே சில அரசாங்கம் தவறிவிட்டதென்றும் இது கடந்த காலங்களில் பார்லிமெண்டில் அனுஷ்டிக்கப்பட்டுவந்த சம்பிரதாயங்களுக்கு முரணானதென்றும் கொழும்புமத்தியதொகுதி இரண்டாவது எம் பியும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமாகிய

(6-ம் பக்கம் பார்க்க)

## நியமன எம். பி.கள் பதவியேற்பு

கொழும்பு, வெள்ளி

நியமன அங்கத்தவர்கள் திரு. டி. ஜி. எல். சிரிசேன, திரு. எஸ். தொண்டமான், திரு அண்ணாமலை ஆகியோர் இன்று விசுவாசப் பிரமாணம் செய்து பதவியேற்றனர்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு:
06 O 0590 ரூபா 21,750-00

இரண்டாவது பரிசு:
03 N 0900 ரூபா 8,700-00

மூன்றாவது பரிசு:
09 D 0835 ரூபா 2,175-00

(6-ம் பக்கம் பார்க்க)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
8-4-65 — 12-4-65
மலிவு விற்பனை
நடைபெறும்.
கைத்தறிச் சேலைகள் 100, 120, 160 நம்பர்
மற்றும் இலங்கா வேட்டி சால்வை சேலைகள்
வோயில் வேட்டிகள்
மற்றும் எல்லா ஜவுளி வகைகளும் விலைகள்
குறைக்கப்பட்டிருக்கின்றன.
தேவைக்கு முந்திக் கொள்ளுங்கள்
ஆ. அப்பையா அன் கோ.,
82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை,
போன்: 506 யாழ்ப்பாணம்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
தரமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
சம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறர்மீது குற்றம் கூறி அவர்களுக்கு நியாயத் தீர்ப்பு அளிப்பது நமது வேலையல்ல. நம்மை நாமே ஆராய்ந்து தீர்ப்பளித்துக் கொள்ள வேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams 'EELA NADU' Jaffna Phone: 889.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 28 உ. (10-4-65)

## சிம்மாசனப் பிரசங்கம்

சர்ச்சைக்குரிய பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில் தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கம் அமைந்திருக்கிறது. இது அமைதியான முறையில் தேசியப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வழிவகுக்குமென எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-லங்க சமசமாஜக் கட்சி கூட்டு அரசாங்கம் அமைக்கப் பட்டபின் நிகழ்த்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சிங்களம் மட்டும் சட்டமும் நியாயமான அளவு தமிழ் உபயோக மொழிச்சட்டமும் அமுல் நடத்தப்படுமென்றும் அதற்கான முறையில் ஷரத்துக்கள் கொண்டுவரப்படுமென்றும் தெரிவித்திருந்தது. தேசிய அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கமும் தமிழ் மொழி உரிமை சம்பந்தமாக அதையேதான் கூறியிருக்கிறது. பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமென்றும் இதர மதத்தவர்களின் வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு பூரண உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கப்படுமென்றும் தேசிய அரசாங்கம் கூறுகிறது. இந்திய வம்சாவளியினர் சம்பந்தமாக சென்ற வருடம் கைச்சாத்திடப்பட்ட சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுமென்றும் சிம்மாசனப் பிரசங்கம் உறுதியளித்துள்ளது.

இவை தவிர அரசாங்க ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கு அரசியல் உரிமை வழங்குவது பற்றியும் தேசிய கல்வித் திட்டம் ஆகியவை பற்றியும் வெளிவிவகாரக் கொள்கை பற்றியும் முன்னைய அரசாங்கம் தெரிவித்தவைகளையே தேசிய அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கமும் தெரிவித்துள்ளது. முன்னைய கூட்டு அரசாங்கம் கைத்தொழில் துறைகளில் அதிக அக்கறை செலுத்தியது. புதிய அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்தியில் அரசாங்கத் துறைக்கும் தனியார் துறைக்கும் ஊக்கமளிக்கப்படுமெனத் தெரிவித்துள்ளதுடன் விவசாய அபிவிருத்திக்கே அதிக கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவைபற்றிக் குறிப்பிட்ட சிம்மாசனப் பிரசங்கம் இவைகளைத் தீர்க்கவும் நாட்டைச் சுபிட்சப் பாதைக்குக் கொண்டு செல்லவும் தேசிய அரசாங்கம் முயற்சி செய்யுமென்றும் கூறுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பற்றி ஊழல் புகார் பற்றி விசாரணை செய்ய ஒரு குழு நியமிக்கப்படுமென்றும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை மாவட்ட நீதிமன்றங்கள் சரியானமுறையில் விசாரணை செய்வதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுமென்றும் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்கம் தனது சிம்மாசனப் பிரசங்கங்களிலும் அறிக்கைகளிலும் அடிக்கடி உறுதியளித்து வந்தவைகளே தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டம் என்ன என்பதை வெளியிடும் ஒரு விஞ்ஞாபனமே சிம்மாசனப் பிரசங்கம். உறுதிமொழிகள் அளிப்பதில் ஒன்றுமில்லை. அவற்றைச் சரியான முறையில் செயல்படுத்துவதில் தான் அரசாங்கம் தங்கியுள்ளது. முன்னைய அரசாங்கங்கள் செய்த தவறை தேசிய அரசாங்கம் செய்யமாட்டாதென்று நம்புகிறோம். சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவித்த திட்டங்களைச் சரியான முறையில் செயல்படுத்தினால் மத வேறுபாடின்றி சகல மக்களும் நாட்டின் சகல துறைகளிலும் சமமாக அனுபவிக்க தேசிய அரசாங்கம் வழிவகுக்குமென எதிர்பார்க்கிறோம்.

# சகலருக்கும் சமநீதி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

● பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் 4 போயா தினங்கள் விடுமுறை தினங்களாக்கப்படும்.

பௌத்த விஷயத்தில் மகாசங்கத்தைக் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

● வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றை ஒழிக்கும் முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லும் விஷயம் பொது, தனியார் துறையை அபிவிருத்தி செய்வதின்மூலம் துரிதமாக்கப்படும்.

### விவசாய அபிவிருத்தி

● இறக்குமதியைக் குறைக்கும் உள்நாட்டு விவசாய அபிவிருத்தி தீவிரமாக்கப்படும். விவசாய அபிவிருத்தி மூலம் கிடைக்கும் செலவணி கைத்தொழிலுக்குப்பயன்படுத்தப்படும்.

● தொழில் அபிவிருத்தி விஷயத்தில் உடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அரசாங்க, தனியார்துறை இரண்டும் தீவிரப்படுத்தப்படும்.

○ கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் திருத்தியமைக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் துரிதமாக நிறைவேற்றப்படும்.

○ உலோக, ரசாயன அபிவிருத்தியில் அரசாங்க, தனி வர்த்தகத்துறை ஏககாலத்தில் அபிவிருத்திசெய்யப்படுவதுடன், தேசிய விவசாயிகள், தொழிலதிபர்கட்கு ஊக்கமளிக்கப்படும்.

பல்கலைக்கழக ஆணைக்குழு, தேசியக் கல்விமுறை ஆகிய அம்சங்கள் விரைவில் விரிவான திட்டத்துக்குட்படும்:

● ஆசிரியர்களின் சம்பளத் திட்டம், இளைப்பாறிய ஆசிரியர்களின் பென்ஷன் திட்டம் ஆகியன பரிசீலனை செய்யப்படுவதுடன் பொலிஸ் சேவை அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் நீதி நியாயவேண்டுகோளை நிறைவேற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் குறிப்பிட்ட சில வகுப்பு அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படும்.

● காணி ஆட்சி உரிமை விஷயத்தில் நிலவுடைமையின் பழைய நிலை ஒழிக்கப்பட்டு தேவையான உரிமை அங்கு வழங்கப்படும். நீர்ப்பாசன அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்யப்படும்.

● புத்தளம் மன்னார் பகுதிகளில் பரீட்சார்த்த குழாய்க் கிணறுகள் நிறுவப்படும்.

● மாதிரி முந்திரித்தோட்டங்கள் அமைக்கப்படுவதுடன் கல்லோயா அபிவிருத்திச் சபை மாற்றியமைக்கமுடியாமல் சட்டம் திருத்தப்படும்.

○ கடற்றொழில் விருத்திக்கு ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுட்பட பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும். மீனவர்களின் நிலைமை இதனால் சீர்ப்படும்.

### கண்டிய குடியான மக்களின் நலன்

● கண்டிய குடியானவர்களின் விசேஷ நலனுக்கு ஏற்ற சீரமைப்புக்கு முயற்சி மேற்கொள்ளப்படும்.

### நடுநிலைமைக் கொள்கை

● வெளிநாட்டு விவகாரத்தில் நடுநிலைக்கொள்கையை எமது அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. சகல நாடுகளுடனும் நட்புறவு கொள்வதே அரசாங்கத்தின் கொள்கை. நாட்டின் சுதந்திரம் பாதுகாப்புக்கு ஆபத்தில்லாத முறையில் நமது வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருக்கும்.

○ வெளிநாடுகள் அளித்த கொழும்புத் திட்ட அறிவுரைக்கு இலங்கை தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

● கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் சரக்குகளை வரவழைத்தல் விநியோகம் ஆகியவற்றில் நடைபெற்ற ஒழுங்கற்ற கபடமுறை பற்றி விசாரிக்க ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படும்.

● லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரிக்க மாவட்டநீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கும் முறையில் சட்டத்தைத் திருத்தும் மசோதா அடுத்த பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதனால் நூற்றுக்கு மேற்பட்ட வழக்குகள் துரிதமாக எடுத்துக்கொள்ள வழியேற்படும்.

○ இந்த அம்சம்பற்றி ஒரு நிறுவனம் ஒன்று நிறுவ ஏற்பாடுசெய்யப்படும்.

○ கவர்னர்ஜெனரல் திரு. கோபல்லவா தமது சிம்மாசனப்பிரசங்கத்தை சிங்களத்தில் வாசித்தார்.

○ அரசாங்கத்துறையும், தனியார்துறையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஒத்துழைக்கும்வகையில் ஊக்கமளிக்கப்படும். தேசிய வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் ஊக்கமளிக்கப்படுவார்கள்.

○ 1964-ம் ஆண்டு இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 8 வயதுக்குமேற்பட்ட சகல இந்திய வம்சாவளியினர்களுக்கும் அடையாளக் கார்ட்டுகள் வழங்கப்படும். இந்தக் கார்ட்டுகள் வழங்குவது மூன்று வருடத்தில் பூர்த்தியாகும்.

○ விமானங்கள், தேவாலயங்கள் ஆகியவற்றின் விஷயத்தில் மகாசங்கத்தின் ஆலோசனைகள் கலக்கப்படும்.

### தமிழிலும் வாசிக்கப்பட்டது

சிம்மாசனப் பிரசங்கத்தின் தமிழ்மொழிபெயர்ப்பை சபாநாயகர் அவைக்கு நிரந்தர சபாபதியாகிய திரு வி. பாலசிங்கம் தமிழிலும், திரு. எம். பெல்லின் ஆங்கிலத்திலும் வாசித்தனர்.

சரியாக இன்று காலை 8-14 க்கு பார்லிமெண்டின் இரு சபைகளும் கூடின.

தரைப்படை, விமானப்படை அணிவகுப்புகள் மரியாதை செலுத்த ... விழாவில் ... பெற்றன ... ராணிமாளிகையில் இருந்து பார்லிமெண்ட்வரை ஆயிரக்கணக்கான மக்கள் அணிவகுத்து நின்றனர்.

முன்னாள் கவர்னர் ஜெனரல் சர் ஒலிவர்குணதிலகா, முன்னாள் பிரதமர் சர் ஜோன் கொத்தலாவல ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்களில் சிலர்.

## ஸ்ரீ தியாகராஜர் உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவம் இம்மாதம் 16ம் தேதியிலிருந்து 18ந் தேதிவரை வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் மாணிக்கவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன விழாவை ஆரம்பித்துவைக்கவிருக்கிறார். இறுதிதினத்தன்று தேசியதாபன மந்திரி திரு எம். திருச்செல்வம் புகழ்பெற்ற நாதஸ்வர நாடக வித்வான்கள் மூவருக்குப் பொன்னாடை போர்த்தி, பட்டமளித்துக் கௌரவிப்பார்.

இலங்கை தியாகராஜ கான சமாஜம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.



## புதிய வழக்கறிஞர்

திரு. கணபதிப்பிள்ளை பரமசிவம் சென்ற புதன்கிழமை கொழும்பு உயர்நீதி மன்றத்தில் நீதியரசர் திரு ஹெச். என். சிறிமானே முன்னிலையில் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். இவர் வேலணை மேற்கைச் சேர்ந்த திரு. ஆ. கணபதிப்பிள்ளையின் புத்திரர் வழக்கறிஞர் இறுதிப் பரீட்சையில் முதல் வகுப்பில் சிறப்புத்தரத்தில் சித்திபெற்றுள்ள இவர் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர்.

---

## 'விவசாயிகளுக்காக பாடுபடுக'

கம்பளை, வெள்ளி

'தோட்ட முதலாளிகள் விவசாயிகளுடைய வாழ்க்கை உயர்ச்சிக்காக பாடுபடவேண்டும், தமக்குகாரர்களுடைய துன்பத்தை பயன்படுத்தி அவர்கள் மேல் அரசியல் காரணங்களுக்காக துன்பத்தை ஏற்படுத்தக் கூடாது இத்தகைய நிலை நீடிக்கு வரவேண்டுமானால் எங்கள் நாட்டின் பொருளாதார வளம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்' என்று புசலாவ தோட்டத்துரைமார் சங்கத் தலைவர் திரு ரஞ்சன் விஜரத்தின சங்கத்தின் எழுபத்திரண்டாவது ஆண்டு பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

---

## பஸ்ஸில் கைக்குண்டு

சுன்னாகத்துறை, வெள்ளி

கொழும்பிலிருந்து காலிக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றில் கைக்குண்டு அடங்கிய பார்சலொன்று பொலிஸ் கான்ஸ்டபிள் ஜோசப்பினால் கண்டுபிடிக்கப்பட்டது. இது சுன்னாகத்துறை பொலிஸ்நிலையத்திலேயே திரு. ஜோசப் கண்டுபிடித்தார். பின்னர் விசாரணைக்காக பஸ் வண்டியும் பிரயாணிகளும் பொலிஸ்நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

## நாடும் நடப்பும்

வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவப்படவேண்டுமென்று இலங்கைப் பல்கலைக்கழக ஆணை வேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகலை கல்வி அமைச்சருக்குச் சிபார்சு செய்திருப்பதாகவும் இதைப் புதிய கல்வி மந்திரி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. தமிழர்களுக்கு இது இனிப்பான செய்தி. புதுவருடத்துக்கு சர்க்கரை தாராளமாகக் கிடைத்துவிட்டது போலும்!

முன்னைய அரசாங்கம் பதவியிலிருந்தபோதும் சேர் அட்டிகலை இந்த நல்ல யோசனையைத் தெரிவித்திருந்தார் அப்போதிருந்த கல்வி அமைச்சர் "இரண்டாயிரம் ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எப்படி அனுப்புவது" என்பதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததால் இந்த யோசனை அவர் செவியில் ஏறவில்லை!

வித்தியாலங்கார, வித்தியோதய பல்கலைக் கழகங்கள் தென்னிலங்கையில் நிறுவப்பட்டுள்ளன; வடக்கு கிழக்கிலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் நிறுவுவதால் என்ன கெட்டுவிடும்?

இராமநாதன் பல்கலைக் கழகம் நிறுவ முன்னைய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது. அதையாவது அந்த அரசாங்கம் நிறைவேற்றியிருந்தால் தமிழரின் ஆசை அரைகுறையாவது கிடைத்திருக்கும்! இந்த அரசாங்கம் இவ்விஷயத்தில் துரித நடவடிக்கை எடுக்குமென்று எதிர்பார்ப்போம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் டில்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரியைச் சந்தித்துப் பேசிவிட்டு இலங்கை திரும்பியுள்ளார். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் சம்பந்தமாக எடுக்கும் எந்த நடவடிக்கையிலும் இந்திய வம்சாவளியினரின் பிரதிநிதிகளையும் கலந்தாலோசிக்கவேண்டும் என்று எத்தனை தடவைகள் எடுத்துச் சொல்லியும் இதற்கு முன்னிருந்த அரசாங்கங்கள் கவனிக்கவில்லை. சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம்கூட இந்திய வம்சாவழியினரின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசிக்காமலே செய்யப்பட்டது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில தினங்களுக்குள்ளேயே, இலங்கையராகும் இந்திய வம்சாவளியினருக்கு தனி வாக்காளர் ஜாபிதா வைக்கப்படும் என்று டட்லி பெருமான் ஒப்பந்தத்துக்குப் புதுவியாக்கியானம் கொடுத்தார். இந்த ஒப்பந்தத்துக்கும் பழைய ஒப்பந்தங்களுக்கு நேர்ந்த கதியே ஏற்படுமோ என அஞ்சப்பட்டது. ஆனால் தொண்டமானின் டில்லி விஜயம் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் துரிதமாக நல்லமுறையில் செயல்பட வழிவகுத்துள்ளது போல் தோன்றுகிறது.

பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களைக்கொண்டே பிரச்னைக்குத் தீர்வுகாண முன்வந்த திரு. டட்லி சாமர்த்தியசாலிதான்! சபாஷ் டட்லி!

---

## தமிழரசு வாலிப முன்னணிக் கிளை ஆங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், சனி

வரணி தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற புதன்கிழமை வரணி சந்தை மைதானத்தில் திரு. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

வாலிப முன்னணிக் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய திரு. சி. மாணிக்கத்தியாகராசா 'வாலிபர்கள்தான் எதிர்காலத்தை நிர்ணயிக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்' என்றும், கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] அரங்கு

# ஜோன்ஸனின் அறிக்கைக்கு கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகள் வரவேற்பு

## சீனு, ரஷ்யா கண்டனம்

### ரஷ்ய "மிக்" விமானங்களை எதிர்க்க அமெரிக்க வேட்டை விமானங்கள் செல்கின்றன

### நிபந்தனையற்ற பேச்சுக்கு ஆயத்தம் என நடுநிலை நாடுகளுக்கு ஜோன்சன் உத்தரவாதம்

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்தும்பொருட்டு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு அமெரிக்கா தயாராயிருப்பதாக ஜனாதிபதி ஜோன்ஸன் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். 17 அணிசாராத நாடுகள் வியட்னும் பற்றி விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்வகையில் அவர் இதைக் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதியின் பதில் நேற்று வாஷிங்டனிலுள்ள 4 ராஜதந்திரத் தூதர்களிடமும், பின் 17 நாடுகளின் ராஜீயப் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்பட்டது.

#### அமெரிக்கா விலகுவதானுல்...

தென்கிழக்காசியாவில் சமாதானம் நிலவத் தென்வியட்னும் சுதந்திரத்துடன் இருக்கவேண்டியது அவசியமென திரு. ஜோன்ஸன் கூறியிருக்கிறார். தென்வியட்னுமின் சுதந்திரத்தில் அந்நியக் குறுக்கீடு நிற்கும்போது அமெரிக்கத் துருப்புகள் அங்கிருந்து வெளியேறுமென்றும் இந்தக் குறுக்கீட்டுக்கு அடிப்படைக் காரணம் வடவியட்னுமின் தாக்குதல் தானென்றும் ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த நிபந்தனையற்ற பேச்சுக்கு அமெரிக்கா தயாரென்றும் மீண்டும் அவர் வலியுறுத்தினுர்.

#### சீனு, ரஷ்யா கண்டனம்

ஜனாதிபதியின் அறிவிப்பை கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகள் வரவேற்றிருக்கின்றன. சீனுவும், ரஷ்யாவும் இதுபற்றிப் பலமாகக் கண்டித்திருக்கின்றன.

#### யுதாண்ட் வரவேற்பு

17 நடுநிலைமை நாடுகளின் வேண்டுகோளுக்குச் சாதகமான நடவடிக்கையென ஜோன்ஸனின் அறிக்கை பற்றி ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் கூறினுர்.

திரு. ஜோன்ஸனின் அறிவிப்பு ராஜதந்திரம் மிக்கதென்றும் அவர் கூறினுர்.

#### அரசியல் தந்திரம்

ஜனாதிபதி ஜோன்ஸன் உதட்டளவிலேயே சமாதானம் பேசுகிறுரென்றும் தென்கிழக்காசியாவுக்கு அவரது பொருளாதார உதவித்திட்டம் ஒரு அரசியல் தந்திரமென்றும் சீனு கூறியிருக்கிறது.

அமெரிக்காவின் கிரிமினல் கொள்கையும், ஆக்கிரமிப்பும் வியட்னுமில் முடிவடையவேண்டுமென ரஷ்யா கூறியிருக்கிறது.

டாஸ் செய்தி ஸ்தாபனம் திரு. ஜோன்ஸனின் உரையைச் சுருக்கமாகப் பிரசுரித்து அவசியமானுல் நீண்டகாலப் போருக்குத் தயாராக இருப்பதாக அவர் கூறியிருப்பது பற்றிக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

யுதாண்ட் திரு. ஜோன்ஸனுக்கு ஒரு பாராட்டை அனுப்பியிருக்கிறார்.

#### இந்தோனேஷியா கருத்து

இந்தோனேஷியா ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்றது. ஆனுல் அவரது பொருளாதார உதவித்திட்டத்துடன் தமக்குச் சம்பந்தமில்லையெனக் கூறியது.

பாகிஸ்தான் அதிபர் அயூபுக்கு நடத்திய விருந்தொன்றில் ரஷ்ய ஜனாதிபதி மிகோயன் பேசியபோது அமெரிக்க நடவடிக்கை உடனிருந்து வாழும் கொள்கையை இல்லாமலாக்குமெனக் கண்டனம் தெரிவித்தார்.

#### பெரும் தாக்குதல்

இதற்கிடையில் நேற்று 60க்கு மேலான அமெரிக்க விமானங்கள் லாவோஸ் எல்லையில் வியட்காங்கியர்மீது பெரும் தாக்குதலொன்றை நடத்தின. 187 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்.

#### நவீன சண்டை விமானங்கள்

அதேசமயம் தென்வியட்னுமுக்கு நவீன சூப்பர்ஸோனிக் 104 வேட்டை விமானங்களை அமெரிக்கா அனுப்புகிறது. ரஷ்ய மிக் விமானங்களை எதிர்க்குமுகமாகச் சக்திவுள்ள இவ்விமானங்கள் அனுப்பப்படுகின்றன.

#### சைகோனில் கலகம்

சைகோனில் கடற்படைத் தளபதிகளுக்கு எதிராய்ச் சில இளம் அதிகாரிகள் கலகம்செய்தார்களென்றும் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதிபெதுவும் இடம்பெறவில்லையென்றும் எல்லாம் அமைதியாக இருக்கிறதென்றும் தென்வியட்னும் அறிவித்தது.

#### ஐ. நா.வில் வழங்குக

ஜனாதிபதி ஜோன்ஸனின் அறிக்கையைப் பற்றுக [illegible] எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் வழங்கவேண்டுமென அமெரிக்கப் பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்ஸன் ஐ.நா.வில் கூறினுர்.

### ஆசிரியர் ஜோன்ஸன்

வாஷிங்டன், ஏப். 9

ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபின்னர் தாம் ஆசிரியராக பணியாற்ற விரும்புவதாக திரு. ஜோன்ஸன் புதன்கிழமையன்று தெரிவித்தார். "லுக்" சஞ்சிகை நடத்திய போட்டியின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட "தேசிய ஆசிரியரான" திரு. க. கினிக்கை கௌரவிக்குமுகமாக வெள்ளை மாளிகையில் நடைபெற்ற வைபவத்திற்கு திரு. ஜோன்ஸன் தலைமைவகித்தார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல்துறை போதனுசிரியராக பணியாற்ற ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக அவரது நண்பர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஜோன்ஸன் தனது அரசியல் வாழ்வை ஆரம்பிப்பதற்கு முன்னர் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஆசிரியராக பணியாற்றினுர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, ஏப் 9

கட்ச் பகுதியிலுள்ள கஞ்சர்கோட்டில் பாகிஸ்தான் அமைத்துள்ள இரு காவல் நிலையங்களை உடன் அகற்றுமாறு இந்தியா பாகிஸ்தானுக்கு விடுத்துள்ள ஆட்சேபக் குறிப்பில் தெரிவித்திருக்கிறது. இப்பகுதியில் பலமான பாகிஸ்தான் படைகள் நிலைகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

### அப்துல்லாவை கைதுசெய்வீரோ?

மாஸ்கோ, ஏப். 9

"ஷேக் அப்துல்லா இந்தியாவுக்குத் திரும்பும்போது அவர் கைதுசெய்யப்பட்டால் பெரும் அனர்த்தம்தான் விளையும்" என பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ மாஸ்கோவில் கூறினுர்.

"இந்தியாவிலும் காஷ்மீரிலும் கூறியதைத் தவிர புதிதாக எதுவும் வெளிநாடுகளில் அவர் சொல்லவில்லை. ஷேக் அப்துல்லாவை கைதுசெய்ய முடியாது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை" என்றும் பூட்டோ குறிப்பிட்டார்.

### "14 ரஷ்ய விண்வெளி வீரர் மாண்டது ஒரு கற்பனை"

#### சோவியத் மறுப்பு

மாஸ்கோ, ஏப் 9


1960-ம் ஆண்டு முதல் வான வெளிவிபத்துகளில் 14 ரஷ்ய விண்வெளிவீரர்கள் மாண்டதாகக் கூறும் இத்தாலிய அறிக்கைகளை ரஷ்யா மறுத்திருக்கிறது.

சோவியத் வானவெளி ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான லெப்டினன்ட் ஜெனரல் நிக்கோலியா கமானின் இந்த அறிக்கை தவறுனது எனக் கூறியிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் "ரெட்ஸ்டார்" பத்திரிகையில் ரஷ்யாவின் விண்வெளி சாதனையை பலவீனப்படுத்தவே காட்டு விமர்சகர்கள் முயல்வதாக எழுதியிருக்கிறார்.

டூரினிலுள்ள வானவெளி அவதான நிலையத்தைச்சேர்ந்த சிஞேர் கியோவன்னி பட்டிலைட்டா இதுபற்றிக் கூறுகையில் 14 ரஷ்யர் மாண்டதாக அமெரிக்கர்கள் பதிவுசெய்திருக்கிறுர்கள். நாங்கள் 9 ரஷ்யர் மாண்டதாகப் பதிவுசெய்திருக்கிறேம் எனக்குறிப்பிட்டார்.

இறந்ததாகக் கூறப்பட்ட சில விண்வெளி வீரர்கள் அடிக்கடி பகிரங்கமாகக் காணப்படுகிறுர்கள் என்றும், மாண்டதாகக் கூறப்படும் பெயர்களில் சில உண்மையில் கிடையவே கிடையாது என்றும், அவை கற்பனைப் பெயர்கள் எனவும் ஜெனரல் கமானின் கூறியிருக்கிறார்.



### கடல்நீர் குடிநீராகிறது

கடல்நீரைச் சுத்தமான குடிநீராக மாற்றும் முயற்சியில் இப்பெண் ஈடுபட்டிருக்கிறார். கலிபோர்னியா சந்தியாகோ ரசாயன ஆராய்ச்சிசாலையில் அதிக செலவின்றி கடல்நீரைக் குடிநீராக்கும் முறைகள் கையாளப்பட்டுவருகின்றன.

### மலேஷியா, ரஷ்யா இடம்பெற முயற்சி

புதுடில்லி, ஏப் 9

அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் மலேஷியாவையும், ரஷ்யாவையும் சேர்க்க வேண்டும் என இந்தியா முயற்சி எடுத்து வருவதாய் பிரதமர் சாஸ்திரி பம்பாய் பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் தெரிவித்தார்.

### அஹமதாபாத் முனிசிப்பல் தேர்தல்

அஹமதாபாத், ஏப் 9

அஹமதாபாத் முனிசிப்பல் சபைக்கான தேர்தல்களில் இதுவரை 61 முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மகா குஜராத் ஜனசங்கிலைக் [illegible] 32 ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது.

### பெர்லின் சாலை மீண்டும் அடைப்பு

பெர்லின், ஏப் 9

மேற்கு ஜெர்மனிக்கும் மேற்கு பெர்லினுக்குமிடையேயான பிரதான பாதையை கிழக்கு ஜெர்மனி நேற்று இருதடவைகள் மூடிவிட்டது. முதலில் காலையிலும், பின் மாலையில் 5 மணி நேரம் வரையிலும் இது மூடப்பட்டது.

ஹாம்பர்க்—பெர்லின் சாலையும் நேற்று அடைக்கப்பட்டிருந்தது.

### கயான பிரதமர்

லண்டன், ஏப் 9

பிரிட்டிஷ் கயானு பிரதமர் டாக்டர் பேர்ன்ஹாம் லண்டனுக்கு விஜயம்செய்ய விருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### 3-ம் டெஸ்ட்

கராச்சி, ஏப் 9

பாகிஸ்தானுக்கும் நியூஸிலாந்துக்குமிடையே மூன்றுவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று கராச்சியில் ஆரம்பமாகிறது.

டெஹ்ரான், ஏப் 9

"ஸெண்டோ" மந்திரிகள் மகாநாடு இன்று முடிவடைந்தது.

### ஒலிபரப்பாகும்

திரு. ஜோன்ஸனின் அறிக்கையை வியட்னும் மக்களுக்கு ஒலிபரப்புமுகமாக சைகோனிலும், பிலிப்பைன்ஸிலும் சக்திவாய்ந்த ஒலிபரப்புச் சாதனங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இந்த அறிவிப்பைத் திரும்பத் திரும்ப ஒலிபரப்பப்படும்.

பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் ஜனாதிபதி ஜோன்ஸனின் அறிக்கையை வரவேற்றிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்ந்த வள்ளங்களை மீட்க மீண்டும் முயற்சி

நல்லூர், வெள்ளி

கடந்த வருட இறுதியில் வீசிய சூறாவளியின்போது கடலில் ஆழ்ந்த மீன்பிடி வள்ளங்களை தேடி எடுக்கும் முயற்சி இரண்டாவது தடவையாக இவ்வார இறுதியில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

சமீபத்தில் நடைபெற்ற முதலாவது தேடுதல் முயற்சி கடல்கொந்தளிப்புக் காரணமாகக் கைவிடப்பட்டது. தற்போது கடல் அமைதியாக இருப்பதனால் மீண்டும் தேடுதல் முயற்சியை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை காரைநகர் கடற்படைத் தளபதி மேற்கொண்டுள்ளார்.

இலங்கை கடற்படை சுழியோடும் வீரர்களுக்கு அமெரிக்கா கடற்படை உடைகளை வழங்கியுள்ளது. சூறாவளியின்போது வடபகுதியில் மட்டும் 75 மீன்பிடிவள்ளங்கள் கடலில் ஆழ்ந்துபோயின என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடலில் மீன்பிடி வள்ளங்கள் ஆழ்ந்த பிரதேசங்களை உத்தேசமாக காண்பிக்கக் கூடிய மீனவர்களின் உதவியை காரைநகர் கடற்படைத் தளபதி நாடியுள்ளார்.

## காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை

காங்கேசன்துறை, வியாழன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் கிளை ஒன்று காங்கேசன்துறையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுத் தரவல்ல தமிழ்க்காங்கிரஸின் முயற்சிகளுக்குத் தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டுமெனவும், தமிழ் மக்களை நல்வழியில் இட்டுச் செல்லக்கூடியவர்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள் என்றும் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசியவர்கள் கூறினர்.

கிளை நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

போஷகர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் எம். பி., உப போஷகர் திரு. க. ஸ்ரீபாலகரன், தலைவர், திரு. க. தாமோதரம்பிள்ளை துணைத்தலைவர் திரு யோ. முத்தையா, இணைக் காரியதரிசிகள் திருவாளர்கள் சோ. கனகராஜா, அ. நிதிரஞ்சன், பொருளாளர் திரு பெ. வில்பிரட், நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## தீப்பிடித்து இளம்பெண் மரணம்

சிவித்திக்கலே, வெள்ளி

சமையலறையில் வேலை செய்துகொண்டிருந்த 19 வயதுடைய இளம்பெண்ணான பெருமை என்பவரின் உடையில் தீப்பிடித்துக்கொண்டதால் எரிகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது அங்கு மரண

## பர்மா இந்தியர்

ரங்கூன், ஏப் 9

பர்மாவிலிருந்து 1800 இந்தியர்களைக்கொண்ட ஒரு கப்பல் இன்று சென்னை புறப்பட்டது.

மானூர்,

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். டபிள்யு.பீரிஸ் தீவிபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## புதுவருடத்தின ஏற்பாடுகள்

நல்லூர், வெள்ளி

புதுவருடத்தினத்தை ஒட்டி உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி ஒரு கூப்பனுக்கு 2 அவுன்ஸ் வீதம் மாசி வழங்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

ஒரு கூப்பனுக்கு 2 அவுன்ஸ் மாசி வீதம் பாவனையாளர்கள் தமக்கு வேண்டிய மாசியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கூப்பன்கடைகள் வருகிற ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும். பாவனையாளர்கள் தமக்கு வேண்டிய பொருட்களை அன்றும் வழமைபோல பெற்றுக்கொள்ள முடியும்.

## புதிய செனட்டர் புது நியமன எம். பி.

கொழும்பு, வெள்ளி

டாக்டர் ஏ. ரத்னபால பார்லிமெண்டில் 6-வது நியமன அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னாள் மந்திரி திரு. ஏ. ரத்னாயக்கா செனட்டராக நியமனம் பெற்றிருக்கிறார்.

## தரம் உயர்த்த பணமில்லை!

நல்லூர், வெள்ளி

மாவிட்டபுரம் உப-தபாற்கந்தோரை தரம் உயர்த்துவதற்குப் போதிய பணம் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

தபாற் கந்தோர் தரமுயர்த்தக்கூடிய அந்தஸ்தை அடைந்துவிட்டதாகவும் தற்போது பணம் இல்லாதிருப்பதினால் உடன் நடவடிக்கை எடுக்க முடியாமலுள்ளதாகவும் கூறும் கடிதம் இங்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்விஷயமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு காங்கேசன்துறை எம். பி, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் உதவியை நாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மீண்டும் சேவை

நல்லூர், வெள்ளி

கடந்த ஒருவருட காலமாகத் தற்காலிகமாக கிராம சேவையாளர் வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்ட நீர்வேலி கிராமசேவையாளர் திரு. ப. சொக்கலிங்கம் மீண்டும் சேவைக்கு நியமனம் பெற்றுள்ளார்.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் உறுதிப்படுத்தப்படவில்லை என விசாரணை நடத்திய அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜயவீரா தீர்ப்பளித்தார். இதனைத் தொடர்ந்து திரு. சொக்கலிங்கம் தமது கடமைகளை வலிவடக்கு காரியாதிகாரி கந்தோரில் பொறுப்பேற்றார்.

## துணிகள் விற்பனைக்கு மட்டும்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இந்து-சீனா வகுட்பறைப் பை முன்னிட்டு துணிகள் விற்பனை செய்வதற்காக மட்டும் கொழும்பில் ஒரு புதிய விற்பனை நிலையத்தை கூ. மொ. வி. ஸ்தாபனத்தினர் திறந்துள்ளார்கள்.

மற்றை கூ. மொ. வி. ஸ்தாபனங்களில் அதிக இடநெருக்கடி இருப்பதன் காரணமாகவே இந்தப் புதிய விற்பனை நிலையம் திறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## நாய்கள் தொல்லை

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரிப் பகுதியில் விசர்நாய்கள் அதிகமாக வீதிகளில் திரிகின்றன. இந்நாய்க்ள் சிலரைக் கடித்துவிட்டதாக ... வேண்டுகோளுக்கு இணங்க ... நாய்களைச் சுட்டுக்கொல்ல ஏற்பாடு செய்துள்ளனர்.

# தமிழ்ப் பகுதிகளில் இரண்டு பல்கலைக் கழகங்கள்

## கல்வி மந்திரிக்கு உபவேந்தர் சிபார்சு

பம்பலப்பிட்டி, வெள்ளி

வட—கீழ் மாகாணங்களிலிருந்து உயர்தர கல்வி பயிலவிரும்பும் மாணவர்களுக்கு இரண்டு சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்ற கருத்துக்களமைய இலங்கை சர்வகலாசாலையின் உபவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிக்கலே, கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலேக்கு சிபார்சு செய்துள்ளார்.

போதிய இடவசதியின்மை காரணமாக பெருந்தொகையான மாணவர்கள் சர்வகலாசாலையில் கல்வி பயிலமுடியாது தள்ளுபடிசெய்யப்படுகின்றனர் என்றும் உபவேந்தர் கல்விமந்திரிக்கு அறிவித்துள்ளார்; பேராதனையில் ஆயிரத்திற்கும் மேலதிகமான வெளிமாணவர்கள் படிக்க வசதியிருந்தும் இடமின்மை காரணமாக மாணவர்கள் படிக்க இடம்பெற முடியவில்லை என்று மேலும் மந்திரிக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

வித்தியலங்கார வித்தியோதய சர்வகலாசாலைகள் உயர்தரக்கல்வி பயிலும் ஒரு பகுதியான சிங்கள மாணவர்களுக்கே படிப்பதற்கு சந்தர்ப்பமும் வசதியும் அளிக்கின்றது. இதன் காரணமாக வட—கீழ் மாகாணங்களில் இருந்து உயர்தரக்கல்வி பயில வரும் மாணவர்கள் இலங்கை சர்வகலாசாலையிலேயே தங்கியிருக்கவேண்டியிருக்கின்றது. வெளிநாடுகளுக்குச் சென்று மாணவர்கள் கல்வி பயில வேண்டிய வசதிகளையும் அரசாங்கம் நிறுத்தியதன் காரணமாக இலங்கை சர்வகலாசாலையில் பயிலவிரும்பும் மாணவர்கள் தொகை அதிகரித்துள்ளது.

இந்த உபவேந்தரின் சிபார்சுகளைக் கொண்டு கல்வி மந்திரி மந்திரிசபைக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது.

## ஒரு கட்டிலில் மூன்று நோயாளிகள் ஆஸ்பத்திரியின் அவலநிலை

பண்டாரவளை, வெள்ளி

'பண்டாரவளை ஆஸ்பத்திரியில் உள்ள நிலைமை மிகவும் மோசமாகவிருக்கின்றது. நோயாளிகள் தங்குவதற்கு போதிய இடவசதியில்லை. ஒரு கட்டிலில் இரண்டு மூன்று நோயாளிகள் இருக்கின்றனர், இக்குறைபாடுகளை எல்லாம் உடனடியாக நிவர்த்திசெய்யாவிட்டால் ஆஸ்பத்திரியென்று பெயரளவில் மாத்திரம் இயங்குவதில் ஒரு பயனுமில்லை' என்று புதிதாக நியமிக்கப்பட்ட உத்தியோக பூர்வமற்ற பண்டாரவளை ஆஸ்பத்திரிப் பார்வையாளர் திரு. பி. பீ. ஏ. லங்கா திலக ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டதன் பின் அபிப்பிராயம் தெரிவித்தார்.

## பதில் நீதிபதி

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி, மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் இரண்டுமாத லீவில் மெக்காவுக்கு யாத்திரை சென்றுள்ளார். அவர் வரும்வரை பதில் மாவட்ட நீதிபதியாக திரு ஈ. ஜீ திஸாநாயக்கா கடமையாற்றுவார்.




குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,


கொழும்பு-11.



தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

சவரின் வளையல்கள்

...ந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவஅமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ. 15-00. M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ 18-50

ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, யட்டிநுவர வீதி, கண்டி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழ் படத்திற்கு மந்திரி தடை

பம்பலப்பிட்டி, வெள்ளி
தற்சமயம் பல மாகாணங்களில் காண்பிக்கப்படும் "ராஜா தேசிங்கு" தமிழ் படத்தை உடனடியாக பொதுமக்கள் பார்வைக்கு விடாது செய்யும்படி கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல உத்தரவிட்டுள்ளார்.

இப்படம் முஸ்லிம்மத சம்பந்தப்பட்ட விஷயங்களை புண்படுத்துகின்றதென்ற காரணத்திற்காக பொதுமக்கள் பார்வைக்கு காண்பிக்கக் கூடாதென்று சேர் ரசிக் பரீத் எம். பி. திரு எம். ஜலால்டீன், திரு. ஏ. எம். நஸீர் ஆகியோர் மந்திரிக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

## வெளிநாட்டு செலாவணி வழங்குவதில் புதியதிட்டம்

பம்பலப்பிட்டி, வெள்ளி
கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வெளிநாட்டு செலாவணி எவ்வாறு வழங்கப்படவேண்டும் என்ற திட்டமொன்றை கைத்தொழில் மந்திரி காரியாலயத்தினர் தயாரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

கைத்தொழிலில் ஈடுபட்டிருப்போர் எவ்வளவு பொருட்களை உபயோகிக்கின்றனர், இத்தொழிலில் ஈடுபடுவதனால் எவ்வளவுக்கு வெளிநாட்டு செலாவணியை சேமிக்க முடிகின்றது, அத்துடன் அவர்கள் தயாரிக்கும் தொழில் அத்தியாவசிய தேவைகளாக உணவு, உடை கட்டடப்பொருள்கள் முதலியவைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றனவா என்பவை போன்ற விஷயங்கள் ஆராயப்பட்ட பின்னரே வெளிநாட்டு செலாவணி கைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Sexy Night Shows!
AROUND THE WORLD
IN
90 NIGHTS
(Totalscope - Color)
[ADULTS ONLY]


## நவீன ஹோட்டல்

பம்பலப்பிட்டி, வெள்ளி
ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன மிகவும் நவீன வசதிகளடங்கிய ஹோட்டலொன்றை கல்கிசையில் கட்டுவது சம்பந்தமாக ஆலோசனை செய்து வருகிறார்.

உலக பிரசித்திபெற்ற முதலீட்டாளர்களான ஜேச்கில்ஸ் தமது பிரதிநிதிகளை இது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கைக்கு அனுப்பியுள்ளார்கள்.

இந்த பிரதிநிதிகள் அமைக்க இருக்கும் ஹோட்டல் மாதிரி படமொன்றையும் தம்முடன் கொண்டுவந்துள்ளார்கள். இந்த ஹோட்டல் திட்டப்படி பூர்த்தியானதும் 23 மாடிகளைக் கொண்டிருக்கும். இந்த ஹோட்டல் கட்டி முடிப்பதற்கு 2 கோடி 80 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## தொழிலாளருக்கான மகாநாடு

பம்பலப்பிட்டி, வெள்ளி
சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் உலக மகாநாடு கண்டியில் இம்மாதம் 19-ம் திகதி நடைபெற இருக்கிறது.

இம்மகாநாட்டில் தொழிலாளர்கள் பற்றிய விஷயம் மிகவும் முக்கியமாக ஆராயப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓரளவு மட்டுமே கல்வியறிவுடையவர்கள் தொழிற் சங்கங்களை நடாத்துவதாக நன்மைக்குப்பதில்கேடே விளையும் என இந்த மகாநாட்டில் உரையாற்றவிருக்கும் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

## பிரதமருக்கு பாராட்டு

பம்பலப்பிட்டி, வெள்ளி
முஸ்லிம அரசியல் சபை பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தங்கள் ஒத்துழைப்பையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள தேசிய ஒற்றுமைக்காக பிரதமர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் முஸ்லிம் அரசியல் சபை பாராட்டியுள்ளது.

## 'ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும்'

—எம். பி.

தெரிவியல, வெள்ளி
'எங்கள் மத்தியிலுள்ள வேறுபாடுகள் அத்தனையையும் மறந்து நாங்கள் ஒற்றுமையுடன் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவோம். தனிப்பட்ட முரண்பாட்டுக் கருத்துக்களை நாம் மறந்து தேசிய அரசாங்கத்தின் நலனுக்காக சகலரும் ஒத்துழைக்கவேண்டும்' என கலகமுவ எம். பி. திருமதி விமலா கன்னங்கரா தமது தொகுதியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## அதிக வரிக்கு ஆட்சேபம்

சாவகச்சேரி, வெள்ளி
சாவகச்சேரி நகரசபை பகுதிக்கு உட்பட்ட இடங்களிலுள்ள காணிகளுக்கு அறவிடப்படும் வரி இந்தவருடத்திலிருந்து அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதை ஆட்சேபித்து பொதுமக்கள் நகரசபைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

## கவனிப்பார்களா?

1958-ம் ஆண்டு மார்ச் மாதம் முற்பகுதியில் எமது கிராமத்தின் வடபகுதியிலுள்ள முடிக்குரிய காணிகளை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கத்தால் காணிக் கச்சேரி கூட்டி காணி பெறத் தகுதி வாய்ந்தோர் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டவர்களுக்குத் தலைக்கு ரூபா 15 கிராம சேவையாளர் மூலம் கட்டும்படி தெரிவிக்கப்பட்டது. மக்கள் தங்களின் பொருளாதார நிலைமிகவும் கீழ் நிலையிலிருந்தும் காணி கிடைக்குமென்ற மகிழ்ச்சியுடன் தங்களது கஷ்ட நிலையையும் பொருட்படுத்தாது மேற் குறித்த பணத்தை கிராம சேவையாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டும் பெற்றனர். இதன் பின் ஏழு ஆண்டு காலம் கழிந்தும் காணிகள் பங்கீடு செய்யப்படவில்லை. வரட்சியிருந்த இக்காலங்களில் நெற் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நிலங்கள் இவை. இக்காணித் துண்டுகளை உடனடியாக மக்களுக்குப் பங்கீடு செய்தால் அரசாங்கத்திற்கு எதுவித செலவுமின்றி உடனே திருத்தப்பட்டு எதிர்வரும் காலபோகத்திற்கு செய்கைபண்ண முடியும். இனிமேலும் காலதாமதம் செய்யாது இவ்விஷயங்களைக் கவனிக்க வேண்டிய அதிகாரிகள் இவற்றுக்கு ஆவனசெய்வார்களா?

கா. மகேஸ்வரலிங்கம்
மண்டைதீவு

## WANTED

Wanted a manager for Rural Credit and Banking section of the Paranthan M. P. C. S. Ltd., Paranthan. Age 25 and 35 years on 1-4-65. Minimum qualification G. C. E. or S. S. C. (Eng. medium) with four credits at one sitting. Preference will be given to those with qualification in Banking, Commerce and Co-operative training. Security cash Rs. 2000/- and property Rs. 5000/-. Selected candidate will be required to undergo training at the Polgolla Cooperative Training College and a branch of the Peoples Bank and will be paid a stipend of Rs. 100/- per mensem during this period. He must be prepared to work at the society for at least five years after the training. Applications close on 20-4-65. Apply stating salary required. 37

## அறிவித்தல்

அன்புடையீர்!
புங்குடுதீவு பாறையிட்டி சிவன்கோவிலின் பெயரால் சிலர் பணம்சேர்ப்பதாக அறிகிறோம். பணம் உதவும் அன்பர்கள் தயவுசெய்து க. சோமசேகரம், ஆலயபரிபாலன தர்மகர்த்தா சபை, தனதிகாரி 7-ம் வட்டாரம், புங்குடுதீவு என்ற விலாசத்துக்கு அனுப்பி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் பணிவுடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன
தர்மகர்த்தா சபை,
115 புங்குடுதீவு-7.

## தேவை

பண்டத்தரிப்பு கிராமசபையின் மின்சாரப் பகுதியில் கூலியாட்களாக வேலைசெய்வதற்கு பண்டத்தரிப்பு கிராமசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கீழ்க்காணும் தகமைகளுக்கு அமைவாக 19-4-65 வரையும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் அக்கிராசனர், கிராமசபை, பண்டத்தரிப்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

தகமைகள்: (i) 7-ம் வகுப்பு சித்தியெய்திருத்தல் வேண்டும்.
(ii) 19-4-65 ல் 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 25 வயதுக்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.
(iii) நன்னடத்தைச் சாட்சிப் பத்திரங்கள் இரண்டு பெற்றிருத்தல் வேண்டும்.

மின்சார இலாகாவில் அனுபவமுடையவர்கட்கு விசேஷ சலுகை வழங்கப்படும்.

பேளி அக்கராசியார்,
அக்கிராசனர்,
கிராமசபை
116 பண்டத்தரிப்பு

### ஜீவயாத்திரை?

எமது தனி நடைக் கற்றீர். கவிதையும் கேட்டீர். ஏன் கதைகள் எழுதவில்லை என்றும் கேட்டு வந்தீர். இதோ எமது முதல் சிருஷ்டி புதுமை நவீனம், திடுக்கிடும் உண்மைச் சம்பவங்கள் பொதிந்துள்ளது. வயதுவந்தோர் மாத்திரம் வாசிக்கவேண்டியது. விரைவில் வெளிவரும் தமது கலிக் தமது சங்கங்களில் அறிமுகம் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்க. யாழ்ப்பாணம், கலாபவனம், பருத்தித்துறை. 39


[illegible]

### விற்பனைக்கு

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு: த. பெ. இல. 896, கொழும்பு. (P. O. Box: 896, Colombo) 34

டயர், டியூப்புகள் எமது வாடிக்கைகாரருக்கு வழமைபோல் கட்டுப்பாட்டு விலைக்கு பதிவுசெய்து கொடுக்கப்படும். ராமலிங்கம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் 7179. 35

சிறந்த பூநகரி, ஆபிரிக்கா, அவுஸ்திரேலிய காய்கறி, பூ விதைகள் இன்றே வாங்கிப் பலன்பெறுக. சிறந்த விதைகள் விநியோகம், சின்னக்கடை, மன்னார். 36

### தொய்வு, தீவிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 தீவிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தா
கைலாயபிள்ளையார் கோவிலடி
யாழ்ப்பாணம்

### தேவை

ஹோட்டலில் உணவு, மதுபானம் பரிமாறுவதற்கும், சமையலுக்கும் வேலையாட்கள் தேவை. நேரிலோ அல்லது கடித மூலமோ விண்ணப்பிக்கவும். 181, பாங்ஷால் வீதி யாழ்ப்பாணம். 33


## 200 சங்கீத, நடன ஆசிரியர்கள்

பம்பலப்பிட்டி, வெள்ளி
சங்கீத, நடன ஆசிரியர் பதவிக்குச் சென்ற மாதம் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட ஆசிரியர்களின் முடிவுகள் அடுத்த வார இறுதியில் வெளியிடப்படுமெனத் தெரியவருகிறது.

இப்பதவிகளுக்கு 300-க்கு மதிகமானவர்கள் மனுச்செய்திருந்தனர். இந்த நியமனங்கள் மே மாதம் தொடக்கம் கொடுக்கப்படலாமென அறியப்படுகிறது. தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் தீவின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுவர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவோலி (நுவரேலியா) ஜுப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30

புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

அதிக இலாபமடையுங்கள்

உங்கள் கால் நடைகளுக்கு, முற்றிலும் புதிய, பூரணமாக சமன் செய்த, உயர்ந்த போஷாக்குடைய தீனுண
ஹைவிட்டா மீல்
ஊட்டுங்கள்
இது உங்கள் கோழிகளுக்கு ஊட்ட உகந்த அதியுன்னத கலவையுங்கூட.

HYVITA

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல மில்ஸ், ஜா-எல.
டெலிபோன்: ஜா-எல-216. கொழும்பு-5767.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான பாவச் செயலாகும்

## செஞ்சிலுவைசங்க நிதி குறித்து டாக்டர் கனகரத்தினம் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சூறாவளி அகதிகளுக்கு உதவியென பொது மக்களிடமிருந்து வசூலித்த பணத்தில், இப்பொழுது கையிருப்பாய் உள்ள பணத்தை தங்கள் சங்க மண்டபம் அமைக்க ஒதுக்குவதென்ற இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் செயல் குறித்து யாழ்ப்பாண மாவட்ட சூறாவளி நிவாரண விசேஷ குழுவின் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

"சூறாவளி அகதிகளில் குந்தியிருக்க குடிசையின்றி, எத்தனையோ பேர் உண்ண உணவின்றி தங்கள் குடும்பத் தலைவர்களையும் இழந்து எழுத்தில் வடிக்கமுடியாத பரிதாப நிலை அடைந்திருக்கும் போது தேவையான உதவி இன்னும் கிடைக்காமலிருந்து அல்லலுறும் போது, தர்மப்பணத்தை ஒரு சிலர் தங்கள் சொந்த ஆடம்பர, சுகங்களுக்கு உபயோகிப்பதென்பது சட்ட விரோதமான, நம்பிக்கைத் துரோகமான பாவச் செயலாகும்" என டாக்டர் கனகரத்தினம் பத்திரிகைகளுக்கு இது குறித்து விடுத்துள்ள நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு சிலருக்கு மட்டும் நவீன வசதிகொண்ட மாடமாளிகை கட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த சங்கம் நிறுவப்பட்டதா?

குடும்பத் தலைவர்களை இழந்து, விதவைகளும், பெற்றோர்களும் பட்டினியால் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், நிவாரண உதவி எதுவும் தேவையில்லை என்று செஞ்சிலுவை சங்கம் எப்படிக் கூறமுடியும், நிவாரண உதவி எதுவும் தேவையில்லை என்று எவ்வாறு இச்சங்கம் மதிப்பீடு செய்தது?

அகதிகளுக்கு உதவும் வகையில் சங்கத்திடம் பணமும், பொருளும் வழங்கிவிட்டு அதனால் சூறாவளி அகதிகள் பயன் அடைந்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் தர்மசிந்தையுள்ளவர்களுக்கு இந்தச் சங்கம் என்ன பதில் கூறப்போகிறது? அகதிகளுக்கு உதவுவதென்ற இப்பெரும் கைங்கரியத்தில் ஈடுபட்ட இச்சங்கத்தினர் வரவு செய்த ஒவ்வொரு சதத்துக்கும் செலவு செய்த ஒவ்வொரு சதத்துக்கும் கணக்கு காட்டவேண்டும்! போர்க்காலத்தில் கூட அரியசேவை செய்து உலகம் பூராவும் வாழும் மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது செஞ்சிலுவைச் சங்கம். ஆனால் இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கமோ அகதிகளின் பணத்தைக் கொண்டு தான் டம்பமாக முயற்சிக்கிறதே!

மிகுதியாயுள்ள பணத்தை அகதிகளுக்கு எவ்விதம் உதவுவதென்று தெரியாவிடில் அந்தப் பணத்தை யாழ்ப்பாண மாவட்ட சூறாவளி நிவாரண விசேஷ குழுவிடம் தாரும். அரசாங்க அதிபர் மூலம் தந்தால் அல்லலுறும் மக்களுக்கு உதவி செய்து செலவு செய்யப்பட்ட ஒவ்வொரு சதத்துக்கும் கணக்கு காட்டுவோம்,

செஞ்சிலுவைச் சங்கத்திடம் மிகுதியுள்ள பணத்தைவிட்டு அரசாங்கம் அக்கறை கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது.

## மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஈழநாடு" சூறாவளி நிதிச் சபையினர் ஆரம்பித்த மாத உதவித் திட்டத்துக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரன்பர் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான 50 ரூபாவை அனுப்பி வைத்துள்ளார்.

## திருப்பாடுகளின் காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

இளவாலை அரச் ஹென்றி அரசர் கல்லூரி மாணவர்களால் இம்மாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு கல்லூரி மைதானத்தில் திருப்பாடுகளின் காட்சி நடித்து காண்பிக்கப்படும்.

காட்சி முடிந்ததும் தூர இடங்களுக்குச் செல்லவேண்டியவர்களுக்கு விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## நியாயமான கோரிக்கைகள்

கொழும்பு, வியாழன்

தேசியமயமாக்கப்பட்ட சேவையில் கடமையாற்றும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை 3 மாத காலத்திற்குள் வழங்க தேசிய சேவை மந்திரி திரு. சுகததாசா தீர்மானித்துள்ளார்.

தொழிலாளர்களின் எல்லாக் கோரிக்கைகள் பற்றியும் ஆலோசனைசெய்யப்பட்டு வருவதாகவும், மூன்று மாத காலத்திற்குள் நியாயமான கோரிக்கைகள் வழங்கப்படுமென்றும் மந்திரி நேற்று கூறினார்.

## 13 பேர் பலி

சென்னை, ஏப் 8

வட்டூரில் இன்று இரண்டு மாட்டுவண்டிகளுடன் ஒரு லொறி மோதிக்கொண்டதில் 13 பேர் மாண்டனர்.

## நியூஸிலந்து 2 விக்: 89 ரன்கள்

கராச்சி, ஏப், 9

நியூஸிலந்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இங்கு ஆரம்பமான 3-வது இறுதி கிரிக்கெட் டெஸ்டில் நியூஸிலந்து 2 விக்கட் நஷ்டத்திற்கு 89 ரன்கள் எடுத்தது.

## புதுவருட போட்டிகள்

மாவிட்டபுரம், வியாழன்

எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பை ஓர் தேசியதினமாகக் கொண்டாடுவதற்கு காங்கேசன்துறையில் தீவிர ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. வை. டி. செனரத், காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு சு. கிருபாமூர்த்தி ஆகியோர் இவ் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகி அன்றைய தினம் மாலை பரிசில்கள் வழங்குவதுடன் முடிவடையும். மாணவர்களுக்கென 3 மைல், 5 மைல் மரதன் ஓட்டப்போட்டிகளும் 5 மைல், 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் தாச்சி, கயிறு இழுத்தல், கைப்பந்தாட்டப் போட்டிகளும் இத்தினத்தன்று நடைபெறும்.


விஜயா

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

திறப்பு விழா

வருகிற 14-4-65 புதன்கிழமை

காலை 9-00 மணியளவில் வரும் சுபவேளையில்

திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்

(பாராளுமன்ற உறுப்பினர்)

மேற்படி ஸ்தாபனத்தை திறந்துவைப்பார்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

146, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 357

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
எஸ். ஏ. நடராசா
(உரிமையாளர்)


## திருமண அழைப்பு

குணரத்தினம் — சத்தியலெட்சுமி

கொக்குவிலைச் சேர்ந்த திரு. கா. தம்பையா அவர்களின் மூத்த புதல்வனும் முத்தையா மோட்டார் ஸ்டோர்ஸ் ஸ்தாபனத்தின் மனேஜருமாகிய திரு த. குணரத்தினம் அவர்களுக்கும், யாழ்ப்பாணம் முத்தையா மோட்டார் ஸ்டோர்ஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு க. தருமலிங்கம், யாழ்ப்பாணம், கொட்டடி, 80/1 சிவாசகம் வீதியைச் சேர்ந்த திருமதி க. தருமலிங்கம் ஆகியோரின் புதல்வி சத்தியலெட்சுமிக்கும் பங்குனி 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (11-4-65) காலை 11 மணிக்கும் 11-55 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி கோவிலில் திருமணம் நிகழும். உறவினர்களும், நண்பர்களும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். விருந்து வைபவம் மணமகள் இல்லத்தில் பிற்பகல் 1மணிக்கு நடைபெறும்.

திரு. க. தருமலிங்கமும், பாரி... 80/1 ... வீதி கொட்டடி, யாழ்ப்பாணம்.

## கொழும்பு செல்லும் யாழ். கிரிக்கெட் கோஷ்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 13-, 14-ம் திகதிகளில் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் கோஷ்டிக்கும், கொழும்பு தெற்கு பாடசாலைகள் கோஷ்டிக்குமிடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இந்தப் போட்டி, பம்பலப்பிட்டி சென் பீட்டர்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்தப்போட்டிக்காக யாழ்ப்பாண பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் வருமாறு:-

(சென்ஜோன்ஸ்): எம் தெய்வேந்திரா, கே. சூரியகுமார், பி. கனகதுரை எஸ். எம். மூக்கதம்பி.

(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி): ரி. டி. சுனேல்குமர், ஏ. பத்மராஜா, ஆர். சச்சிதானந்தன்.

(ஹாட்லிக் கல்லூரி): எம். நடராஜசுந்தரம், எஸ். மகேசவாசனம்.

(சென் பட்ரிக்ஸ் கல்லூரி): ஜே அன்ரன், எஸ் இராசரத்தினம்.

(மகாஜனக் கல்லூரி): எம். விஜயசமூர்த்தி.

(ஸ்கந்தவரோதயாக் கல்லூரி): ஆ. இந்திரன்.

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி): கே, சத்தியானந்தன்.

இந்தக் கிரிக்கெட் கோஷ்டியுடன் திரு. பி. சியாசராஜா திரு. ஜே. துரைராஜா ஆகியோரும் செல்வார்கள் எனத் தெரிய வருகிறது இக்கோஷ்டி 12-ம் திகதி கொழும்புக்குப் புறப்படுகிறது. இப்போட்டியில் இக்கோஷ்டி வெற்றி பெற்றால், கொழும்பு வடக்கு பாடசாலைகளுடன் விளையாடும்.

## தேசிய சுவீப்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 108 75 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | | |
|---|---|---|
| 10 H 0483 | 10 Q 0359 | 05 V 0502 |
| 01 C 0687 | 01 C 0843 | 06 R 0012 |
| 08 E 0822 | 04 Z 0603 | 08 S 0814 |
| 03 B 0847 | 03 E 0951 | 09 B 0672 |
| 07 H 0157 | 06 U 0012 | 02 F 0453 |
| 05 V 0629 | 04 C 0049 | 02 O 0637 |
| 02 M 0197 | 08 F 0781 | 05 U 0513 |
| 09 J 0760 | 10 P 0499 | 01 C 0421 |
| 03 B 0563 | 03 X 0019 | 09 D 0800 |
| 09 U 0442 | 06 P 0428 | 06 E 0692 |
| 10 P 0670 | 06 G 0913 | 05 C 0857 |
| 07 K 0924 | 03 J 0918 | 08 S 0001 |
| 02 W 0162 | 06 X 0091 | 04 Q 0828 |
| 10 J 0377 | 09 T 0634 | 04 U 0043 |
| 06 R 0759 | 09 N 0931 | 01 D 0009 |
| 03 E 0878 | 01 D 0485 | 03 B 0903 |
| 01 A 0342 | 07 X 0936 | 08 B 0031 |
| 09 S 0387 | 01 Y 0064 | 09 S 0776 |
| 02 Q 0793 | 07 M 0449 | 09 H 0158 |
| 10 R 0264 | 04 H 0116 | 06 N 0204 |
| 01 K 0122 | 03 T 0426 | 04 M 0343 |
| 09 Z 0042 | 02 Z 0412 | 05 S 0600 |
| 08 O 0563 | 06 T 0566 | 04 C 0787 |
| 04 B 0361 | 03 K 0804 | 08 P 0284 |
| 05 F 0917 | 04 Z 0213 | 05 O 0006 |
| 03 Z 0788 | 10 H 0270 | 06 V 0984 |
| 07 X 0937 | 08 B 0363 | 07 E 0096 |
| 03 A 0472 | 03 W 0644 | 06 T 0489 |
| 08 S 0779 | 04 T 0880 | 07 G 0231 |
| 01 L 0298 | 04 L 0536 | 09 Z 0488 |
| 04 G 0208 | 04 P 0271 | 08 R 0793 |
| 04 O 0462 | 06 L 0486 | 07 Y 0981 |
| 08 K 0766 | 02 M 0989 | 02 X 0155 |
| | 05 P 0648 | |

## கரம் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

பரந்தன் விளையாட்டுக் கழகம் நடத்திய கரம் விளையாட்டுப்போட்டியில் தனிநபர்களுக்கிடையிலான (சிங்கிள்ஸ்) ஆட்டத்தில் ஆர். ஜெகநாதன், ஆர். சோமசேகரத்தை 29-7, 29-0புள்ளிகளால் வெற்றிபெற்றார். இருவர் சேர்ந்து ஆடும் (டபிள்ஸ்) ஆட்டத்தில் ஆர். ஜெகநாதனும், ஏ. முத்தையாவும், ஆர். ஜி. சிவகுமாரனையும், டி. அல்போன்ஸையும் 29-16, 22-29, 21-1 புள்ளிகளால் தோற்கடித்தனர்.

கரம் விளையாட்டுப்போட்டி இப்பகுதியில் இதுவே முதல் தடவையாக நடத்தப்பட்டதால் பல ரசிகர்கள் வெகு ஆவலுடன் இதனைப் பார்வையிட்டனர்.

## இன்று

ஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை, நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறும் முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பல அறிஞர்கள் உரையாற்றவிருக்கிறார்கள்.

* * *

கொழும்பு ஸ்ரீராமகானசபா ஸ்ரீராமநவமி தினத்தை பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவிலில் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது. இதைமுன்னிட்டு மாலை 6 மணி முதல் ஸ்ரீராம ஆராதனை, பூஜைகள் நடைபெறும்.

## தொழிற்சங்கங்கள் ஆதரவு

கொழும்பு, வியாழன்

தபால்தந்தி இலாகாவைச் சேர்ந்த பதினொரு தொழிற்சங்கங்கள் பொதுமராமத்து மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவுக்கு தங்கள் முழு ஆதரவையும் வழங்கத் தீர்மானித்துள்ளன.

இச்சங்கங்களில் மொத்தம் 16,000 அங்கத்தவர்கள் உள்ளனர். மற்றும் பல சங்கங்களும் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

கெய்ரோ, ஏப் 8

மலேசிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரசாக் இன்று ஜனாதிபதி நாஸருடன் பேச்சு நடத்தினார்.

## பார்லிமெண்டில்:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருவருமான திரு பீட்டர் கெனமன் சுசரஞ்சாட்டினர். கடைசி வரிசையில் அமர்ந்தனர்

இன்று காலை பார்லிமெண்டில் இருசபைகளினதும் கலப்பு கூட்டத்தை கவர்னர்ஜெனரல் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்து, உரை நிகழ்த்திய சமயம் எதிர்க்கட்சியினருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் கடைசிவரிசையில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயகவும் இதர எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் அமர்ந்தனர். இதற்கு முன், பார்லிமெண்ட் திறப்புவிழாவுக்குமுன் நடைபெறும் சபை நடவடிக்கையிலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. எதிர்க்கட்சியினருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் முன்வரிசையில் மூன்று ஆசனங்களை அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென நேற்று சபாநாயகர் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்தே எதிர்க்கட்சியினர் இவ்வாறு நடந்துகொண்டனர்,

### எதிர்க்கட்சி வெளிநடப்பு

ஜனப்பிரதிநிதிகள்சபை சபாநாயகர் சேர் அல்பர்ட் பீரிஸ் தலைமையில் இன்று காலை கூடியபொழுது சபாநாயகர் சிம்மாசனப் பிரசங்கப் பிரதியை வாசிக்கத் தொடங்கியதும் எதிர்க்கட்சியினர் சபையிலிருந்து வெளிநடப்புச்செய்தனர்.

### சபாநாயகர் எச்சரிக்கை

மற்றொரு கட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா பேசிக்கொண்டிருக்கையில் கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல குறுக்கிட்டு பேசுகையில் அங்கத்தவர்கள் விவேகமற்ற முறையில் கண்டபடி குறுக்கிட்டு பேசினால் தாம் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சபாநாயகர் எச்சரித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 35-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org